**தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி 03 - 2019**

---

தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி 03 இன் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு கருத்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி 03 இன் மொத்த நீளம் வெட்டியவிலிருந்து அந்தரவேவ வரை அண்ணளவாக 15 கிலோமீற்றராகும். அம்பாந்தோட்ட சர்வதேச மைய அபிவிருத்தி நடவடிக்கைக்கு ஆதரவளித்தல் மற்றும் ஊக்கப்படுத்தலிற்கு வீதி வலையமைப்பின் அபிவிருத்தியில் ஒரு பிரதான உருப்படியாக அடயாளப்படுத்தல் செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். முன்மொழியப்பட்ட தெற்கு அதிவேகப்பாதை இடமாறல் மாத்தறை தொடக்கம் பெலியட்ட (பகுதி 01) பெலியட்ட தொடக்கம் வெலிய (பகுதி 02), வெலிய தொடக்கம் அந்தரவேவ (பகுதி 03) மற்றும் அந்தரவேவ ஊடாக மத்தளை தொடக்கம் ஹம்பாந்தோட்டை (பகுதி 04) போன்ற நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டிருந்தது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் பகுதி 03 இன் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 36,174 மில்லியன் ஆக உள்ளதுடன் சிவில் வேலைகளின் கிரயம் ரூபா 31,574 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 252 மில்லியன் ஆகிய தொகைகள் சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2016 சனவரி 25 இல் தொடங்கியிருந்ததுடன் 2018 சனவரி 25 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2019 ஜுன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

---

செயற் திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

**1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இல.08 இற்கு முரணாக, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி கொள்வனவு மீது செலுத்த வேண்டிய தாமத வட்டிக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் குறைவான வெளிப்படுத்தல். | உடன்பட்டனர். 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காணி கொள்வனவு மீதான செலுத்த வேண்டிய தாமத வட்டியினை செலுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | ஏற்பாடுகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இல.08 இன் படி நிதிக்கூற்றுக்களில் செய்யப்படல் வேண்டும். |

## 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

| | கணக்காய்வு விடயங்கள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | ஒப்பந்ததாரர் ஐ.அ.டொலர் 5,060,994 பெறுமதியான சில இயந்திரங்களை தக்கவைத்துக்கொள்ள வேண்டி இருந்தார். இருப்பினும், ஒப்பந்ததாரரினால் வரிக்கொடுப்பனவுகள் செய்யப்பட்டதுடன் தொடர்புபட்ட எவ்வித ஆவண உறுதிப்படுத்தல்களும் காணப்படவில்லை. | ஒப்பந்ததாரரிற்கு தேவையற்ற நன்மைகள். | அப்பொறி / உபகரணம் ஒப்பந்ததாரரின் இணக்கப்பாட்டுடன் 2021 பெப்ரவரி 22 இற்கு முன்னர் அகற்றப்படுமென ஒப்பந்ததாரர் உறுதிப்படுத்தியிருந்தார். ஈ.எஸ்ஈபி பிரிவு 2 இன் இறுதி பட்டியல் இன்னும் உறுதிப்படுத்தப்பட்டிராததன் காரணமாக, பொதி/ உபகரணத்தின் விற்பனைக்கான ஏதாவது நியம சுங்கதீர்வை அல்லது வரி ஈஎஸ்ஈபி பிரிவு 2 இலிருந்து கழிக்கப்படக்கூடும். | இலங்கை அரசாங்கத்திற்கு வரியினை செலுத்த அல்லது இயந்திரங்களை மீள் ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி 02 ஆனது 2020 பெப்ரவரி 25 இல் கணிசமானளவு பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் குறைபாட்டு நிபர்த்தி காலப்பகுதி கூட 2021 பெப்ரவரி 24 இல் காலாவதியாகும். ஆந்நிலைமையில், செயற்திட்டமானது 2019 செப்தம்பர் 25 இல் அச் செயற்திட்டத்திற்கு ஐ.அ.டொலர் 10,363,385 பெறுமதியான உபகரணங்களை இடமாற்றம் செய்திருந்தது. | ஏற்றமதி செய்யக்கூடிய உருப்படிகளை வரிகள் செலுத்தாமல் வைத்திருப்பதனூடாக ஒப்பந்ததாரரிற்கு தேவையற்ற நன்மைகள். | பகுதி 2 பூர்த்தியாகும் வரை ஈஎஸ்ஈபி பகுதி 03 இற்காக இறக்குமதி செய்யப்பட்ட உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களின் வேலை ஆரம்பிப்புடன் ஈஎஸ்ஈபி - பகுதி 02 இன் இழந்த செயலாற்றலை ஈடுசெய்து கொள்ள ஒப்பந்ததாரர் ஊக்கப்படுத்தப்பட்டிருந்தார். அப் பகுதி 2 பட்டியலிடப்பட்ட பூர்த்தியாக்கல் திகதிக்கு முன்னர் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. | இலங்கை அரசாங்கத்திற்கு வரியினை செலுத்த அல்லது இயந்திரங்களை மீள் ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் புவியியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பீரோவின் அறிவுறுத்தல்களை மீறி மலைகளிலிருந்தான மண்ணை ஒப்பந்ததாரர் அகற்றியிருந்தார். இது ஐந்து தனியார் காணி உரிமையாளர்களிற்கு ஒர் பாதகாப்பற்ற நிலமையினை உருவாக்கியிருக்கின்றது. ஆவ் அதிகார சபைகள் இந்நிலமையினை சீர் செய்ய எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. காணி உரிமையாளர்களினால் மண் வழங்கப்பட்ட வழங்குனர் செயற்திட்டத்தின் மண் வழங்குனர் பட்டியலில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், மகாவலி அதிகார சபையின் காணிகளிலுள்ள பாரிய குழிகள் திருத்தப்படாததன் காரணமாக மழை நீரினால் மூடப்பட்டிருந்தது. | சுற்றாடல் அழிவுகள் மற்றும் சங்கடமான மற்றும் பாதுகாப்பற்ற நிலமைகள் எழக்கூடும். | புவியியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பீரோ மற்றும் மண்ணியல் குழு என்பன சுரங்க வேலைகளிற்கான அனுமதிப்பத்திரத்திற்கான அனுமதியை வழங்கும் அதிகாரத்தினை கொண்டிருந்தது. எனவே எடுத்துச்செல்லும் குழிகளின் கண்கானிப்பு மற்றும் திருத்தம் எங்களது கண்கானிப்பின் கீழ் உள்ளது. | சுற்றாடல் அழிவுகள் மற்றும் சங்கடமான மற்றும் பாதகாப்பற்ற நிலமைகளை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | உரிய ஒப்பந்ததாரரின் கிரயத்தில் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 இன் கீழாக செய்யப்பட்ட ஏற்பாட்டிற்கு முரனாக செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை வழங்குவதற்கான கிரயத்தினை மேற்கொள்வதற்கு ஒப்பந்ததாரரினை அனுமதிப்பதனூடாக வீதி புனரமைப்பு வேலைகள் மீதான அளவைப்பட்டியலின் வேறான கொடுப்பனவு உருப்படிகள் செய்யப்பட்டிருந்தது. அதன்படி கூட்டுமொத்தம் ரூபா 99 மில்லியன் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தின் கிரயத்தினை மீளப்பெற்றுக்கொள்ள ஒப்பந்ததாரரிற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்ததாரரிற்கு தேவையற்ற நன்மைகள். | செயலாற்றல் பாதுகாப்பு அவரது சொந்தகிரயத்தில் வழங்கப்படும் எனக் கூறுவதன் அர்த்தமானது செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தின் சமர்ப்பிப்பானது ஒப்பந்ததாரர் ஒப்பந்த பீஓகியுவ் வின் எல்எஸ் உருப்படி 1.2 (4) இன் கீழ் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தின் கிரயத்தை அதன்படி பெற்றுக்கொள்ள உரித்தானதன் பின்னர் இரு தரப்பினர்களிடையேயும் ஒப்பந்தத்தினை ஏற்படுத்துவதற்கு ஓர் முன் நிபந்தனையாகும் என சீஓசீ (COC) கூறி இருக்கின்றது. | அளவைகள் பட்டியலின் மீளாய்வு விலை மனு ஆவணங்களை வெளியிட முன்னர் பெறுகை நிபுனர்கள் மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவினால் செய்யப்படல் வேண்டும். |
| (உ) | செயற்திட்டத்தின் சாத்தியவள கற்கைகளின் பிரகாரம், வெட்டிய தொடக்கம் அந்தர்வேவ வரையான அதிவேகப்பாதையின் சேவை நிலையங்களை நிர்மானிக்க அடையாளப்படுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், சேவை நிலையத்தை வடிவமைக்கவோ அல்லது அதிவேகப்பாதையின் பயன்பாட்டாளர்களிற்காக வசதிகளை வழங்க அதிவேகப்பாதையின் அளவைப்பட்டியல்களில் ஏற்பாடுகளை செய்யவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொது மக்கள் சேவை நிலையமில்லாமல் வெளிப்பன தொடக்கம் ஹம்பாந்தொட்டை வரையான நீண்ட தூரம் (173 கி.மீ) பயனளிப்பதற்கு சிரமத்தினை எதிர்கொள்வர். | எவ்வித ஈஎஸ்ஈபி ஒப்பந்த பீஓகியுவ்வும் கருத்துரு கட்டத்திலான சிவில் வேலைகள் ஒப்பந்தங்களினூடாக சேவை நிலையத்தை நிர்மானிக்க ஏற்பாடுகள் செய்திருக்கவில்லை. | சேவை நிலையத்தினை ஏற்படுத்தி கொடுக்க முடியுமான அளவு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |